## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. ஜெயலட்சுமி | அசல் வழக்கு எண். | 86/2009 |
| க/பெ. | - | | வா.சா. | 2 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

27.01.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் 1-ம் பிரதிவாதியின் மீது தனியாக இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.6/2014 வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்ட அ.வ.எண்.6/2014 வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் என் அம்மா அமுதம்மாள் எங்களுக்கு பாகபிரிவினை செய்து சொத்துக்களை கொடுத்துவிட்டார், அதனை தர மறுத்ததால் என் தம்பியான 1ம் பிரதிவாதியின் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தேன். அ.வ.எண்.6/2014 வழக்கு என்ன ஆனது என்றால் வழக்கு தள்ளுபடி (DFD) ஆகிவிட்டது. அதே காரணத்திற்காக தான் இந்த அசல் வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கை எந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் வருடம் எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்துக்களை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. இந்த வழக்கு இரண்டு முறை நடவடிக்கையின்மை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த இரண்டு வழக்குகளையும் என் அம்மா மற்றும் என் தம்பியான 1ம் பிரதிவாதி உயிருடன் இருந்த காலத்தில் நடத்த முன்வரவில்லை என்றால் சரியல்ல, நடத்தி தான் வந்தோம். எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அயிட்டங்கள் எனக்கு தெரியாது, மொத்தமாக எங்களிடம் 9 ஏக்கர் சொத்து இருந்தது. என் தம்பி உயிருடன் இருந்த வரை என் தம்பி மட்டும் தான் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல, அனைவரும் ஒன்றாக தான் இருந்தோம், என் அம்மா எங்களுக்கு கொடுத்ததை நாங்கள் அனுபவித்து வந்தோம். என் தம்பி சொத்து, என் அக்கா மற்றும் என்னுடைய சொத்துக்களுக்கு தற்போது வரை வரப்பு போடவில்லை என்றால் சரிதான். பட்டாவும் தனித்தனியாக

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.01.27 16:51:59 +0530

பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு நான் தனியாக வரி செலுத்தி இரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் 1ம் பிரதிவாதியும் தனித்தனியாக தான் வசித்து வந்தோம் என்றால் தனி வீடுகள் தான் ஆனால் இரண்டு வீடுகளும் பக்கத்து பக்கத்தில் உள்ளது. எனக்கு பாகம் கொடுத்த பூமியில் 1ம் பிரதிவாதி தான் வேலி அமைத்து அனுபவித்து வந்தார் என்றால் நான் அதில் 72 வருடங்களாக இருந்தேன், அதன் பிறகு 1ம் பிரதிவாதி அந்த வீட்டை பிரித்துவிட்டார். அந்த இடம் தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தில் தற்போது வரை எதுவும் கட்டப்படவில்லை என்றால் சரியல்ல, 1ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார். அந்த வீட்டில் 1ம்பிரதிவாதி உயிருடன் இருந்த வரை அனுபவித்து வந்து தற்போது 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் குடியிருந்து வருகின்றனர் என்றால் சரிதான்.

3. என் பிரமாண பத்திரிக்கையில் முகவரியாக குறிப்பிட்டுள்ள யோகலட்சுமி நகரில் உள்ள இடம் நான் தனியாக வாங்கிய இடம் என்றால் சரிதான். அந்த இடத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரிதான். யோகலட்சுமி நகரில் நான் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் சுமார் 15 வருடங்கள். நான் யோகலட்சுமி நகரில் குடியேறுவதற்கு முன்பு எத்தனை வருடங்களுக்கு முன்பு அந்த இடத்தை கிரையம் வாங்கினேன் என்றால் நான் குடியேறுவதற்கு மூன்று வருங்களுக்கு முன்பு கிரையம் வாங்கினேன். வழக்கு சொத்தின் எந்த சொத்து எனக்கு உரிமையானது, எந்த சொத்து 1ம் வாதிக்கு உரிமையானது என்றால் எனக்கு அது ஞாபகமில்லை. வழக்குரையில் எந்த சொத்து எனக்கு உரிமையானது என்றும் எந்த சொத்து 1ம் வாதிக்கு உரிமையானது என்று குறிப்பிட்டு தனித்தனியாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

4. நானும் என் அக்காவான 1ம் வாதியும் தனித்தனியாக தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். 1ம் வாதி எந்த ஊரில் வசித்து வருகிறார் என்றால் இடையஞ்சாவடியில் வசித்து வருகிறார். 1ம் பிரதிவாதி வீட்டிற்கும் 1ம் வாதியின் வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சமார் 2 கிலோ மீட்டர் இருக்கும். 1ம் வாதி இடையஞ்சாவடியில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறார் என்றால் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருகிறார். 1ம் வாதி வசித்து வரும் விவரம் எனக்கு நேரடையாக தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்கள் 1ம் வாதியின் வீட்டிற்கானது என்றால் சரியல்ல, என் வீட்டிற்கானது. 1ம் பிரதிவாதி உயிருடன் இருந்தபோது சமரசம் பேசினாரா என்றால் இல்லை. நான் ஏதாவது சமரசம் பேசினேனா என்றால் இல்லை.

PONVENTHAN D Digitally signed by PONVENTHAN D Date: 2026.01.27 16:52:05 +0530

5. வழக்கு சொத்தில் வாதிகள் முந்திரி பயிர் விவசாயம் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல, நானும் 1 ம் வாதியும் தான் பயிர் செய்து வருகிறோம். வா.சா.ஆ. 2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்கள் எழுதியது 1 ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் பாகம் ஏற்படும் வரை வழக்கு சொத்தை 1 ம் பிரதிவாதி தான் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். பாகமான பின்பு நான் வழக்கு சொத்தை 1 ம் பிரதிவாதியிடம் கேட்ட பிறகு தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்குள் எங்களை விட மறுப்பதால் தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், அடி தடி ஏற்பட்டு காவல்நிலையம் வரை புகார் செய்யப்பட்டது. காவல்நிலையத்தில் என்ன ஆனது என்றால் எங்களுக்குள் பிரச்சனை தீராது என்றும் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுங்கள் என்று அனுப்பிவிட்டனர்.

6. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்கள் மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும் மேற்படி ஆவணங்கள் நடைமுறைக்கு வரவில்லை என்றும் வழக்கு சொத்தை 1 ம் பிரதிவாதி தான் அனுபவித்து வந்தார் என்றும் பொய்யான பொருண்மைகளுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ள இடத்திற்கு நான் போவது கிடையாது என்றால் சரிதான், எங்களை அடித்து விரட்டிவிட்டார். வழக்கு சொத்துக்களை 1 ம்பிரதிவாதியின் வாரிசுகள் தான் அனுபவித்து வருகின்றனர் என்றும் நானும் 1 ம் வாதியும் எந்த காலத்திலும் அனுபவித்து கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் அனுபவத்தில் இல்லாததால் தான் என் அம்மாவும் என் தம்பியான 1 ம் பிரதிவாதியும் உயிருடன் இருந்த வரை வழக்கு நடத்த முன்வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு உரிமையில்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.01.27 16:52:10 +0530

District Munsif
Vanur.